## 12. அன்பு கூர்ந்திடுவேன் அழைத்த

பல்லவி

அன்பு கூர்ந்திடுவேன் அழைத்த தேவனையே
உம் தீர்மானத்தின்படி என்னை அழைத்தீர்
அன்பு கூர்ந்திடுவேன்

சரணங்கள்

1. என் வாழ்வில் நடக்கும் காரியமெல்லாம்
நன்மைக்கேதுவாய் முடிப்பீரே – 2
நீர் உண்மையுள்ளவரே
என் வாழ்க்கையை வரைந்துள்ளீர்
- அன்பு கூர்ந்திடுவேன்

2. தண்ணீரை நான் கடக்கும்போது
என்னுடன் வருவீரே – 2
நீர் உண்மையுள்ளவரே – உம்
சித்தம் என் வாழ்வில் செய்வீர்
- அன்பு கூர்ந்திடுவேன்

3. ஆறுகளை நான் கடக்கும் போது
அவைகள் என்மேல் புறள்வதில்லை
நீர் உண்மையுள்ளவரே – உம்
சித்தம் என் வாழ்வில் செய்வீர்
- அன்பு கூர்ந்திடுவேன்

4. அக்கினியில் நான் நடக்கும் போது
அக்கினி என்மேல் பற்றாது - 2
நீர் உண்மையுள்ளவரே – உம்
கரத்தில் என் காலம் உண்டு
- அன்பு கூர்ந்திடுவேன்